# *சாராம்சம்*


# மோசடி ஒன்றின் தீர்வு உடன்படிக்கை

## கொழும்பு ஹில்டன் ஹோட்டல் கட்டுமானம்

# இலங்கை அரசின் மீதான மோசடி

***அமேசான் புத்தகங்கள் - ['Colombo Hilton Hotel Construction - Fraud on Sri Lanka Government Vol. 3 - Settlement of a Fraud'](http://www.consultants21.com/page-1-derivative-actions-in-law.php)***

***http://www.consultants21.com/page-1-derivative-actions-in-law.php***




***அளவு - 8.25" X 11" - பக்கங்கள் 776***

பகுதி III ஆன இந்த புத்தகத்தில் உள்ள விடயங்களை தெளிவாக புரிந்து கொள்வதற்கு, இதன் முதல் இரண்டு பாகங்களான கொழும்பு ஹில்டன் கட்டுமானம் - இலங்கை அரசின் மீதான மோசடி பகுதி I மற்றும் கொழும்பு ஹில்டன் ஹோட்டல் கட்டுமானம் முறையற்ற முறையில் "மறைக்கப்பட்ட இலங்கை அரசின் மீதான மோசடி பகுதி *II* ஆகிய புத்தகங்களை வாசித்திருத்தல் வேண்டும்.

மூன்றாம் உலக அபிவிருத்தியடைந்துவரும் சுதந்திரமான இறையாண்மையுள்ள நாட்டின் மக்கள் மீது கூட்டாக அதீத ஊழல் நிறைந்ததாகவும் செய்யப்பட்ட இம்மோசடி தொடர்பில் எவ்வித வெட்கமும் இன்றி பொருளாதார பலம் நிறைந்த நாடொன்று ஏற்கனவே நிரூபிக்கப்பட்ட மோசடி நடவடிக்கை தொடர்பில் ஏழ்மையான ஒரு நாட்டை அழுத்தி நடந்த மோசடியை மூடி மறைக்க முயற்சித்த இன்றைய உலகின் உண்மை முகத்தை இப்புத்தகமானது வெளிக்கொணர்ந்துள்ளது.

இலங்கை அரசின் உத்தரவாதத்தின் பேரில் நிதியிடப்பட்ட கொழும்பு ஹில்டன் ஹோட்டல் கட்டுமானத்தில், ஹில்டன் சர்வதேச நிறுவனத்தின் தொழிநுட்ப ஆதரவுடன் ஜப்பானின் கட்டிடக்கலை நிறுவனங்களான கங்கூ கிகாகு சேகிசா , யோசோ சிபாட்டா போன்ற நிறுவனங்களும் ஜப்பானிய கட்டுமான கம்பெனிகளான மிட்சுய் கூட்டுத்தாபனம் மற்றும் டைசெய் கூட்டுத்தாபனம் போன்றன கூட்டாக மோசடியில் ஈடுபட்ட குற்றத்திற்கான மறுக்கமுடியாத ஆதாரங்களுடன் நூலாசிரியர் நிரூபித்துள்ளார். இவை தொடர்பான ஏல விடயங்களும் இந்த புத்தகத்திலும் மேற்குறித்த ஏனைய இரண்டு புத்தகங்களிலும் மற்றும் "சமூக அரசியல் யதார்த்தங்கள்- ஹில்டன் ஹோட்டல் மாறாட்டம் - கொள்கைக்கு எதிரான சொத்து அபகாரியப்பு சட்டம்" போன்ற புத்தகங்களினூடாக நூலாசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார்.

வாதியான நூலாசிரியரின் சட்டத்தரணி சட்ட மா அதிபர் சுனில் டீ சில்வாவிற்கு அறிவிப்பு வழங்கியதன் பின்னர், மோசடிகள் நடந்த சூழ்நிலையில் இலங்கை அரசாங்கம் வழங்கிய உத்தரவாதம் சட்டத்தின் முன் செல்லுபடியற்றதும், பெறுமதியற்றதுமாகியிருக்கும். இதனை ஜப்பானிய நிதி வழங்குனர்களுக்கு உண்மை நிலைமையினை விளக்கும் நோக்கில் திறைசேரியின் செயலாளர் R.பாஸ்கரலிங்கம்பின்வரும் குறிப்பினை எழுதுகிறார் - 'தயவாக இதனை வாசிக்கவும் . ஜப்பானிய தூதுவர் இது எமது உதவியினை பாதிக்கக்கூடும் எனத்தெரிவித்திருந்தார்'

*"டி சில்வா & பெரேரா*

பதிவுத் தபால்

கௌரவ.சுனில் டி சில்வா ஜ.ச
சட்டமா அதிபர்
சட்டமா அதிபர் திணைக்களம்
ஹால்ஸ்ட்ராப் வீதி
கொழும்பு 12

மா.நீ.கொழும்பு வழக்கு எண் 3155/spl

ஏலவே தங்களுடனான கருத்து பரிமாற்றத்தை அடிப்படையாக கொண்டும் மாவட்ட நீதிபதியினால் 1ம் 2ம் 3ம் 4ம் பிரதிவாதிகளுக்கு எதிராக 28.10.91 அன்று கொடுக்கப்பட்ட மேற்குறித்த நடவடிக்கையும் இடைக்கால தடையயின் பிரதியையும் இத்தோடு இணைத்துள்ளோம் .

கற்றறிந்த மாவட்ட நீதிபதியின் தீர்ப்பின் உள்ளடக்கங்களை நீங்கள் கருத்திற்கொள்வீர்கள் என் நம்புவதோடு, விசேடமாக நீதிமன்றத்தினால் மோசடி இடம்பெற்றமைக்கான அடித்தளம் உள்ளதாக காணப்பட்ட கூட்ட மோசடி தொடர்பில் இலங்கை மக்களின் நன்மை கருதி மோசடி ஒன்று நிகழ்ந்துள்ள சூழ்நிலையில் இலங்கை அரசின் உத்தரவாதமானது செல்லுபடியற்றதாகும் என்பதனை சம்பத்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்துவீர்கள் எனவும் நம்புகிறோம்.

நீங்கள் ஜப்பானின் எக்சிம் வங்கிக்கும் ஏனைய கூட்டு நிதியாளர்களுக்கும் இதனை தெரியப்படுத்துவதை கருத்திற்கொள்ளவேண்டும். அத்தோடு கூட இந்த விடயம் தொடர்பில் நாங்கள் 26.09.90 அன்று அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்துள்ளீர்கள் எனவும் நம்புகிறோம் .

தயவு செய்து பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்தவும்

தங்கள் விசுவாசமுள்ள
வழக்கறிஞர்கள் / பிரதி: செயலாளர் நிதியமைச்சு,செயலாளர் திறைசேரி"

ஹில்டன் ஹோட்டலின் உரிமைத்துவ நிறுவனமான HDL ன் பங்குதாரர் என்றவகையில் மனுதாரரான நூலாசிரியர், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த தடையுத்தரவை உறுதி செய்யும் வகையில் இலங்கை உச்ச நீதிமன்றில் இலங்கை அரசின் உத்தரவாதத்தின் அடிப்படியில் HDL லோ இலங்கை அரசோ ஜப்பானிய கம்பெனிகளுக்கான கொடுப்பனவுகளை செய்வதை தடை செய்வதை வெற்றிகரமாக நிலைநாட்ட்டினார். மனுதாரரான நூலாசிரியரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறுக்கு கேள்விகளுக்கு பதிலளிக்குமாறு இந்த ஜப்பானிய கம்பெனிகளை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் ஆணையிட்டிருந்த போதும் அவர்களால் பதிலளிக்க முடியாமல் போனது.

இந்தப் பின்னணியில் இலங்கை அரசிற்கும் அதன் மக்களுக்குமெதிராக இடம்பெற்ற கூட்டு மோசடியினை மூடிமறைக்கும் வகையில் ஜப்பானிய கம்பெனிகள் மனுதாரரான நூலாசிரியர் இந்த வழக்கினையும் இதனோடு தொடர்புபட்ட இன்னுமொரு வழக்கினையும் வாபஸ் பெற வேண்டும் என ஜப்பானிய அரசினூடாக இராஜதந்திர அழுத்தங்களை இலங்கை அரசின் மீது பயன்படுத்தியது. வறுமைப் பொருளாதார நெருக்கடியில் இருந்த இலங்கை அரசானது வேறு வழியின்றி இந்த இராஜதந்திர அழுத்தத்திற்கு அடிபணிந்து இந்த கோரிக்கையை நிறைவேற்றியதானது, இன்றைய சமூக அரசியல் நிஜத்தின் வெளிப்பாட்டின் ஓர் அம்சமாக அமைந்தது. இலங்கைக்கான ஜப்பானிய தூதுவரான நாசாகி குனியாசு நிதியமைச்சின் செயலாளர் R பாஸ்கரலிங்கத்திற்கு 18.02.1993 அன்று எழுதிய கடிதத்தில் மனுதாரரான நூலாசிரியரிடமிருந்து இவ்வழக்கு தொடர்பில் உறுதியான முடிவு ஒன்று வேண்டும் எனவும் காலந்தாழ்த்துவது நிலைமையை மேலும் மோசமாக்கும் எனவும் தெரிவித்திருந்தார்.

மனுதாரரான நூலாசிரியரின் வழக்கறிஞர்களால் சட்டமா அதிபரான சுனில் டி சில்வா அவர்களுக்கு மோசடி இடம்பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தில் ஜப்பானிய முதலீட்டாளர்களுக்கு இலங்கை அரசு வழங்கிய உத்தரவாதமானது செல்லுபடியாகாது எண்டு அறிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்த போதும், நிஜத்தை வெளிப்படுத்தும் வகையில் திறைசேரி செயலாளர் R பாஸ்கரலிங்கத்தினால் இதை ஒரு சரியான முடிவுக்குக் கொண்டுவரும்படியும் இல்லையேல் இது ஜப்பானிய உதவிகளை பாதிக்கும் என ஜப்பானிய தூதுவரினால் எனக்கு கூறப்பட்டதாகவும் குறிக்கப்பட்டிருந்தது.

"ஜப்பானிய தூதரகம்
இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு

20,கிரகரிஸ் வீதி
கொழும்பு 07

திரு. R . பாஸ்கரலிங்கம்
செயலாளர்
நிதியமைச்சு
கொழும்பு 01

*திரு.பாஸ்கரலிங்கம் அவர்களே,*

*நேற்றைய நாளில் உங்களால் வழங்கப்பட்ட மிகவும் நல்ல மதிய உணவிற்காக மிக்க நன்றி. நாம் கலந்துரையாடிய விடயங்கள் சுவாரஸ்யமானதும் நன்மையானதுமாக இருந்தது. எவ்வாறெனினும் இப்படியான சந்திப்புக்கள் எதிர்வரும் காலங்களில் முன்கூட்டியே நடத்துவதனால் இலங்கை மற்றும் ஜப்பானுக்கு நன்மைபயக்கும் என எதிர்பார்க்கிறேன்.*

*நேற்றைய தினம் நான் கூறிய நிலுவையிலுள்ள வழக்கு தொடர்பில், தாங்கள் ஜப்பானுக்கும் அமெரிக்காவிற்குமான பயணத்திற்கு முன்னர் ஒரு நிச்சயமான தீர்வை எட்ட முடியுமேயானால் மிகவும் மெச்சத்தக்கதாக இருக்கும், ஏனெனில் நீங்கள் நாட்டில் இல்லாதவேளையில் எதுவும் சாதகமாக இடம்பெறாது என நான் கருதுகிறேன்.அத்தோடு தீர்வை எட்டுவதில் தாமதம் அதிகரிக்கும்போது அது நிலைமையை மேலும் மோசமாக்கும் என்பதையும் கூறி வைக்க விரும்புகிறேன்.*

*எல்லா வேளையிலும் நீங்கள் வழங்கும் ஒத்துழைப்பிற்கு நன்றி.*

*உங்கள் உண்மையுள்ள*

*நஸாகி குன்னியாசு*
*ஜாப்பனீய தூதுவர்"*

*இந்த ஜப்பானிய இராஜதந்திர அழுத்தங்கலின் நிமித்தம் சட்டமா அதிபர் T.J.மாறப்பான அவர்களுடன் R பாஸ்கரலிங்கம் மற்றும் திறைசேரியின் செயலாளர் திறைசேரி அதிகாரிகள் மற்றும் மனுதாரரும் நூலாசிரியரும் அவருடைய சிரேஷ்ட வழக்கறிஞர் ஜனாதிபதி சட்டத்தரணி K கனக் -ஈஸ்வரன் உள்ளடங்கியோரும் மேற்கொண்ட கலந்துரையாடலின் அடிப்படையில் இறுதி கொடுப்பனவு ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டது, எனினும் ஏற்கனவே சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் திறைசேரி அதிகாரிகள் நூலாசிரியரான மனுதாரர் அவருடைய சிரேஷ்ட வழக்கறிஞர் ஜனாதிபதி சட்டத்தரணி K கனக் -ஈஸ்வரன் போன்றோருக்கிடையில் இடம்பெற்ற பேச்சுக்களில் மோசடி இடம்பெற்றது என்பதை ஏற்றுக்கொண்டு உறுதி செய்யப்பட்டிருந்தது.*

*நூலாசிரியரான மனுதாரரின் வற்புறுத்தலுக்கிணங்க மிட்சுய் மற்றும் டைசுய் கூட்டுத்தாபனங்கள் அவர்கள் ஹில்டன் ஹோட்டல் கட்டுமானத்திற்கு வழங்கிய கடனில் 8 வருடங்கள் சேர்ந்த வட்டியையும் மூலதனத்தில் 30% னையும் ஒதுக்கி தள்ள ஒப்புக்கொண்டதுடன், மேற்குறித்த வரைபு கொடுப்பனவு ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொண்டவாறு மிகுதி கடனை 13 வருடங்களில் 5.9% வருடாந்த வட்டியோடுகூட மீள் செலுத்தும்படியாக உடன்பட்டார்கள்*

*"நிதியமைச்சு*

திரு. நிஹால்.S . அமரசேகர
167/4, ஸ்ரீ விபுலசேன மாவத்தை
கொழும்பு 10

*கனம் ஐயா,*

***<u>ஹில்டன் திட்டம்- வரைபு ஒப்பந்தம்</u>***

இத்தோடு கூட 17 ஜூன் 1993 அன்று திகதி இடப்பட்ட ஒப்பந்த வரிப்புகளின் 1,2,3 ம் இலக்கங்களை உடைய பிரதிகளை இணைத்துள்ளேன்.

11/6/93 திகதி இடப்பட்ட குறித்த வரைபு ஒப்பந்தங்களில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன. அந்த மாற்றங்கள் பச்சை நிறத்தில் நிறமிட்டு காட்டப்பட்டுள்ளது.

திறைசேரியின் செயலாளர் இந்த வரைபுகள் தொடர்பில் தங்களது கருத்துக்களை இயலுமான விரைவில் பெறுமாறு எனக்கு அறிவுறுத்தல் கொடுத்துள்ளார்.

தங்கள் விசுவாசமுள்ள

திருமதி. காசி செட்டி
இயக்குனர் நாயகம்
மனிதவள கொள்கை மற்றும்
பொருளாதார விடயங்கள்
நிதியமைச்சு"

எவ்வாறெனினும் பயங்கரவாதிகளின் குண்டுத் தாக்குதலில் மே 1993ம் ஆண்டு ஜனாதிபதி பிரேமதாச அவர்களின் சடுதியான மரணத்தை தொடர்ந்து, மேலதிக ஜப்பானின் இராஜதந்திர அழுத்தங்களின் நிமித்தம்நூலாசிரியரான மனுதாரரையும் சட்டமா அதிபர் T .J . மாரப்பன அவர்களையும் இந்த கொடுப்பனவு ஒப்பந்தத்தை முடிவிற்கு கொண்டுவரும்படியான முறைச்சிக்கான ஒரு கலந்துரையாடலுக்கு 1994 ஜூன் மாதத்தில் ஜனாதிபதி D.B விஜேதுங்க அவர்கள் அழைத்திருந்தார்கள் .

எனினும் இலங்கை அரசு வழங்கியிருந்த உத்தரவாதத்திற்கு மேலதிகமாக மேலே குறிப்பிடப்பட்ட மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட செலுத்தவேண்டிய மிகுதி கடன் தொகைக்கு அரசாங்கத்திடமிருந்து பொருத்தனை குறிப்பொன்றை மிட்சுய் மற்றும் டைசுய் கூட்டுத்தாபனங்கள் வலியுறுத்திய காரணத்தால் அந்த முயற்சி கைகூடவில்லை.

நூலாசிரியரான மனுதாரர் மீது கொண்டுவரப்பட்ட தாங்க முடியாத அழுத்தங்களின் காரணாமாக இருதயக் கோளாறு என சந்தேகிக்கப்பட்டு அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் சிகிச்சைகளுக்காக வெளிநாட்டிற்கு கொண்டுசெல்லப்பட்டார்.அவர் வைத்தியசாலையில் இருக்கும்போதே அன்றைய திறைசேரி செயலாளர் N.V.K.K. வீரகொட அவர்கள் நூலாசிரியரான மனுதாரரை சந்திப்புகளுக்கு வரும்படியும் இந்த கொடுப்பனவுகளை முடிவு செய்யவும் வலியுறுத்தியதுமன்றி, அவரது மனைவியை ஜனாதிபதி D.B. விஜேதுங்க அவர்களுக்கு எழுதும்படியும் வலியுறுத்தினார்.

மேலும் வெளிப்படுத்தப்பட்டது என்னவெனில் HDL ன் பெயரில் நூலாசிரியரான மனுதாரர் மேல் அதிகம் அழுத்தம் பிரயோகிக்கும் முகமாக ஆதாரமற்ற தவறான ஒரு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டபோது, சரியான ஆதாரங்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் அரசும் ஜப்பானிய மற்றும் HDL நிறுவனங்களும் எழுத்து மூலம் தமது மனவருத்தத்தை நூலாசிரியரான மனுதாரருக்கு தெரிவித்திருந்த அதேவேளை,HDL ஆனது பிரத்தியேகமான ஒரு கொடுப்பனவு ஒப்பந்தத்தை நூலாசிரியரான மனுதாரரோடு செய்துகொண்டது.

1994ம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தோடு அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள்இந்த கூட்டு மோசடியை விசாரிக்கும் முகமாக விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமித்தார். இந்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு இலங்கை பொலிஸ் குற்றப்புலனாய்வு திணைக்களமும், சட்டமா அதிபர் திணைக்களத்தின் சொலிசிட்டர் நாயகம் உட்பட்ட அதிகாரிகளும் தமது ஒத்தாசைகளை வழங்கினர் .

இவ்வாணைக்குழு ஆவண ஆதாரங்களுடன் வாதியான நூலாசிரியருடைய சாட்சி உட்பட 24 பேரிடம் சாட்சியங்களை பதிவு செய்திருந்ததுடன் மூவர் அடங்கிய பட்டய கட்டிட வடிவமைப்பாளர் குழுவின் ஆய்வு ரீதியான அறிக்கையினையும் பெற்றிருந்தது. இலங்கை அரசிற்கெதிராக மேற்கொள்ளப்பட்ட

மோசடி தொடர்பான சாட்சியங்கள் அடிப்படையில் இவ்வாணைக்குழு 1995 டிசம்பரில் இலங்கை அரசிற்கெதிரான மோசடி எனும் அடிப்படையில் நான்கு நபர்கள் மீது குற்றப்பத்திரிகையினை தாக்கல் செய்திருந்தது.

மேற்குறித்தவற்றிற்கு மேலாக நீதியமைச்சர் G.L. பீரிஸ் அவர்கள் பின்வரும் கூற்றை வெளிப்படையாக கூறியிருந்தார்.

> ***"ஜப்பானிய ஒப்பந்தக்காரர்களுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையானது, முழுங்கடிக்கப்பட்ட அரச வளங்களை மீட்பதற்கும் அவற்றை பாதுகாப்பதிலும் அரசின் கடமை தொடர்பில் மக்கள் முன்னணி அரசின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தவாறு பாரிய சேமிப்பை கொண்டு வந்துள்ளது. எவ்வாறெனினும் இந்த உடன்படிக்கைக்கும் குற்றம் இழைத்தவர்களுக்கு எதிராக ஊழல் மோசடிக்கெதிரான விசேட ஜனாதிபதி ஆணைக்குழு எடுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை."***

எவ்வாறெனினும் நிஜத்தில் தலைகீழாக நீதியமைச்சர் G.L . பீரிஸ் அவர்கள் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்படுகளை முடக்கியிருந்தார். ஆதாரம், கொழும்பு ஹில்டன் ஹோட்டல் கட்டுமானம் முறையற்ற முறையில் "மறைக்கப்பட்ட இலங்கை அரசின் மீதான மோசடி பகுதி II

இலங்கை அரசிற்கும் மிட்சுய் அண்ட் கோ , டைசெய் கூட்டுத்தாபனம் HDL மற்றும் மனுதாரரான நூலாசிரியர் என்போருக்கிடையில் இலங்கை அரசின் சார்பில் திறைசேரியின் செயலாளரினால் செயற்படுத்தப்படவிருந்த, சட்டமா அதிபரான ஷிப்லி அசிஸ் சட்டத்தரணி அவர்களால் உருவாக்கப்பட்டு சொலிசிட்டர் நாயகம் அவர்களால் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுதாரரான நூலாசிரியரால் ஆய்வு செய்யப்பட்ட இறுதி கொடுப்பனவுகள் ஒப்பந்தத்தையும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவானது ஆய்வு செய்தது.

21.06.1995 அமைச்சரவையின் குறிப்பாணையின் பாகங்கள் கீழே உள்ளவாறு,

**30.06.1995ன் படியான மொத்த நிலுவை (மிட்சுய் மற்றும் டைசுய் கம்பெனிகளுக்கு)**

| | ஜப்.யென் மில் | அமெ.டொ மில் @ 85யென்/அமெ டொ | ரூபா மில் @0.58 ரூபா/யென் |
|---|---|---|---|
| மிகுதி கட்டுமானம் & FFE செலவு | 1400 | 16 | 812 |
| நீண்டகால கடன் | 12,300 | 145 | 7,134 |
| 1999 முழுமையாக செலுத்தவேண்டியவை | 13,700 | 161 | 7,946 |
| வட்டி மிகுதி கட்டுமானம் & FFE செலவு மீதான | 1,562 | 18 | 906 |
| நீண்டகால கடன் வட்டி | 7,617 | 90 | 4,418 |
| கட்டப்படாத தொகை மீதான வட்டி | 4,827 | 57 | 2,800 |
| கடந்த காப்புறுதி தொகை | | | |
| | 87 | 1 | 50 |
| | 14,093 | 166 | 8,174 |
| மொத்த நிலுவை | 27,793 | 327 | 16,120 |

***தீர்வின் போது தள்ளுபடியான கொடுப்பனவு (நிஹால் ஸ்ரீ அமரசேகரவின் வற்புறுத்தலினால்)***

| | ஜப்.யென் மில் | அமெ.டொ மில் @ 85யென்/அமெ டொ | ரூபா மில் @0.58 ரூபா/யென் |
|---|---|---|---|
| 30% மிகுதி கட்டுமானம் &FFE | 420 | 5 | 244 |
| 30% நீண்டகால கடன் முதலீடு | 3,690 | 43 | 2140 |
| | 4,110 | 48 | 2,384 |
| நிலுவை வட்டி | 4,827 | 57 | 2,800 |
| 1984லிலிருந்து ஜூன் 30 1995வரையான சாதாரண வட்டி | 7,617 | 90 | 4,418 |
| மிகுதி கட்டுமானம் & FFE செலவுகள் மீதான வட்டி | 1,562 | 18 | 906 |

| | ஜப்.யென் மில் | அமெ.டொ மில் @ 85யென்/அமெ டொ | ரூபா மில் @0.58 ரூபா /யென் |
|---|---|---|---|
| முதலீடு கட்டுமானம் &FFE | 980 | 12 | 568 |
| நீண்டகால கடன் | 8,610 | 101 | 4,994 |
| | 9,590 | 113 | 5,562 |
| கூட்டுக: குறைத்த ஜப்பானிய யென்னின் (9590-312) முதலீட்டு மிகுதியில் சாதாரண 3% வ.வட்டி 2 ஆண்டுகள் ஜூலை 1993-ஜூன் 1995 | 556 | 7 | 322 |
| | 10,146 | 119 | 5,885 |
| கழிக்க: 1990 செப்டெம்பரில் இடைக்கால தடியுத்தரவினால் இடைநிறுத்தப்பட்ட மே 1990 வரை மிட்சுய் & டைசுய் கம்பெனிகளுக்கு செய்யப்பட்ட கொடுப்பனவு | 312 | 4 | 181 |
| தடையுத்தரவினால் கம்பெனிக்கு தேங்கிய பணம் | 2000 | 24 | 1,160 |
| | 2,312 | 27 | 1,341 |
| 30.06.1995ன் படியான தெரிய குறைக்கப்பட்ட நிலுவை | 7,834 | 92 | 4,544 |
| கடந்த காப்புறுதி தொகை 30% தள்ளுபடி | 26 | 0 | 15 |
| கழிக்க : குறைத்த ஜப்பானிய யென்னின் (9590-312) முதலீட்டு மிகுதியில் சாதாரண 3% வ.வட்டி 2 ஆண்டுகள் ஜூலை 1993-ஜூன் 1995 | | | |
| | (556) | (7) | (322) |
| | 13,476 | 159 | 7,816 |
| மொத்த தள்ளுபடி தொகை | 17,586 | 207 | 10,200 |

***தீர்வின் அடிப்படையில் 30.06.1995ன் படியான நிலுவை***

இதன்போது மனுதாரரான எழுத்தாளரின் வலியுறுத்தலின் பேரில் மிட்சுய் அண்ட் கோ,மற்றும் டைசுய் கூட்டுத்தாபனம் என்பன இலங்கை அரசிடமிருந்து எதிர்பார்த்த வருமதியான 10 வருட சேர்த்த வட்டியையும் முதலீட்டின் 30 சதவீதத்தினையும் தள்ளுபடி செய்ததோடு, தள்ளுபடி செய்யப்படாத ஏனைய பெறுமதியானது 16 வருடங்களில் குறைந்த வட்டி வீதமான வருடத்திற்கு 5.25 என்னும் அடிப்படையில் மீள்செலுத்தும் படிக்கு மீள் அட்டவணைப்படுத்தியிருந்தது என்பது உறுதியானது. இந்த தள்ளுபடியானது குறித்த ஜப்பானிய நிறுவனங்களை இலங்கை அரசிடமிருந்து எதிர்பார்த்த 68 சதவீதமான கொடுப்பனவுகளை நிகரானதுடன், அன்றைய பெறுமதியின்படி ஜப்பானிய யென்னில் 17,586 மில்லியனாகவும்,அமெரிக்க டொலரில் 207மில்லியனாகவும் இலங்கை ரூபாவில் 10,200 மில்லியனாகவும் கணக்கிடப்பட்டது.

இறுதி கொடுப்பனவுகள் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இந்த நடவடிக்கையானது இலங்கை அரசிற்கும் HDL நிறுவனத்திற்கும் மிகவும் சாதகமாக அமைந்தது என்பதை இலங்கை அரசானது ஏற்றுக்கொண்டது. இந்த தள்ளுபடி AWFDR பெறுமதியானது 30.06.2016ன்படி ரூபா.89,177.3 மில்லியனாகவும் மீளத்தவணைப்படுத்தப்பட்ட பெறுமதியானது ரூபா 51,451.8மில்லியனாகவும் கணிப்பிடப்பட்டது.

சட்டமா அதிபரினால் தயாரிக்கப்பட்டு அனுமதியளிக்கப்பட்ட இறுதி கொடுப்பனவுகள் ஒப்பந்தத்தை விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் உத்தரவின் பேரில் அமைச்சரவையின் அங்கீகாரத்தோடு இலங்கை அரசின் சார்பில் திறைசேரியின் செயலாளர் 1995ம் ஆண்டு நடைமுறைப்படுத்தினார்.

"திரு. A .S . ஜயவர்தன
செயலாளர் நிதியமைச்சு,திட்டமிடல், இன விடய
மற்றும் தேசிய ஒருமைப்பாடு.

<u>ஹோட்டல் டிவலப்பேர்ஸ்( லங்கா) வரையறுக்கப்பட்ட</u>

மேற்குறித்த கம்பெனி தொடர்பிலான தங்களது 9ஜூன் 1995அன்று திகதியிடப்பட்ட கடிதத்திற்கு பதிலாக இதோடு குறித்த வரைபு ஒப்பந்தங்களை இணைத்துள்ளேன்.

எனது பார்வையில் வரைபு ஒப்பந்தங்கள் சரியாக உள்ளது.

P.L.D. பிரேமரத்ன
தற்காலிக சொலிசிட்டர் நாயகம்
சட்டமா அதிபருக்காக "

இந்த முடிவானது நீதியமைச்சரும் பிரதி நிதியமைச்சருமான G.L. பீரிஸ், வெளியுறவு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் யசுவோ நகுச்சி என்போர் முன்னிலையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மிகவும் நல்லதொரு விடயமாக பகிரங்கப்படுத்தப்பட்டது, அதிர்ச்சிகரமாக இலங்கை அரசிற்கும் அதன் மக்களிற்கும் எதிராக நடாத்தப்பட்ட இந்த கூட்டு மோசடியானது இவர்களை பொறுத்தவரை வெறுமனே ஒரு "கருத்து முரண்பாடாகவும்" ஜப்பானிய இலங்கை உறவிற்கு ஒரு பாதகமான தடையாகவும் மாத்திரமே பார்க்கப்பட்டது.

மேற்குறித்த தீர்வு ஒப்பந்தத்தில் ஹில்டன் ஹோட்டலின் உரிமைத்துவ நிறுவனமான HDL ன் நிதி மீள்கட்டமைப்பு உள்ளடங்கலான பல்வேறு விதிமுறைகள் விதிக்கப்பட்டிருந்தன. அவற்றுள் ஒன்றாக பொதுக் கம்பெனியாக பட்டியலிடப்பட்ட காமபிணியொன்றில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் பாதுகாப்பு மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு (SEC) தனது சட்டபூர்வமான கடைமையை செய்யத்தவறியாமையும் அதற்கு பொறுப்பான SEC அதிகாரிகள் மீது இலங்கை அரசு சட்ட நடவடிக்கை எடுக்கும் என்பதும் ஒன்றாகும். ஆதாரம் :

***"5 HDL சார்பாக எந்தவொரு நடவடிக்கையையும் தொடர உரித்துடைய திரு.அமரசேகர அவர்கள் HDL இன் சார்பில் பாதுகாப்பு பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள் மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தனை அல்லது அதன் இயக்குனர்கள் தொடர்பில் திரு அமரசேகர முன்வைத்துள்ள சமர்ப்பணங்களின் அடிப்படியில் இலங்கை அரசாங்கமானது இந்நிறுவனங்கள் நடவடிக்கை தொடர்பில் சரியானதும் சுயாதீனமானதுமான நடவடிக்கை எடுக்க வேண்டும்."***

*இவர்களில் SEC ன் உறுப்பினர்களான இலங்கையின் நீதியமைச்சர் G.L. பீரிஸ், இலங்கை அரசிற்கும் , கம்பனிக்கும் மக்களிற்கும் எதிராக இடம்பெற்ற மோசடியை மூடி மறைக்க முற்பட்டவராக இருந்தார். அத்தோடு அரசு சட்டத்தரணியாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் கடமை ஆற்றிய பொது சட்டத்தரணி அரித்த. R .விக்ரமநாயக்க இது ஒரு கூட்டு மோசடி என்பதை ஒத்துக்கொண்டிருந்தாலும் பின்னர் SEC ன் இயக்குனர் நாயகமாக இதற்கெதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் இருந்ததுடன் அல்லாமல் இது குறித்த கடிதங்களுக்கு பதிலளிக்கவில்லை.*

*முன்னதாக இந்த தீர்வு ஒப்பந்தத்தை "இன்று ஒரு சந்தோசமான நாள் ஹில்டன் ஹோட்டல் முரண்பாட்டில் ஒரு தீர்வினை பெற்றுள்ளோம்" என போற்றிய நீதியமைச்சர் G.L. பீரிஸ், அதனை சாதித்த பெருமையை தான் பெற முயற்சித்த போதும், எனினும் மேற்குறித்த கட்டுப்பாடுகள் தொடர்பில் அவர் தேய்வுற்ற போது தீர்வு ஒப்பந்தத்தை பாராளுமன்றிற்கு உள்ளேயும் வெளியிலும் விமர்சனம் செய்தபோது அது மேலும் முரண்பாடுகளை தோற்றுவித்தது.*

*நீதியமைச்சரான G.L. பீரிஸின் தவறான தீங்கான, முரண்பாடான அறிக்கைகள் நிமித்தமும் செயற்பாடுகளின் மூலமும், இந்த தீர்ப்பு ஒப்பந்தத்திற்கு எதிரான குழுக்கள் ஒப்பந்தத்தை எதிர்த்து சட்ட நடவடிக்கைகளை பத்துவதற்கு வழிவகுத்தது. எனினும் இந்த வழக்குகள் பின்னர் தள்ளுபடி செய்யப்பட்டன. இதன் விளைவாக ஹில்டன் ஹோட்டலின் உரிமைத்துவ கம்பெனியான HDL ன் தீர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு செய்யப்பட்ட இருந்த HDL ன் நிதி மீள்கட்டமைப்பு பணியானது முற்றுமாக சீர்குலைக்கப்பட்டது, இது HDL நிதி நெருக்கடிக்கு முகங்கொடுக்க வழிவகுத்தது. ஆதாரம்: ஒப்பந்தம் 2*

**"14. மேற்குறித்தவாறு ஹில்டன் ஹோட்டலின் இலாபத்தையும் கடன் மீளளித்தல் திறனையும் மேம்பட செய்யும் வகையில் மிட்சுய் டைசுய் கூட்டுத்தாபனங்களுக்கோ அல்லது அரசிற்கோ கடனை மீளளிக்கும் வகையில், ஹில்டன் HDL ஆனது உரிமையின் அடிப்படையிலோ அல்லது புதிய பங்குகளை விநியோகித்தோ அல்லது வேறு பொருத்தமான முறையில் நிதியை கண்டுபிடித்து ஹில்டன் ஹோட்டலின் 3ம் கோபுரத்தையும் மாடி அறைகளையும் கட்டுவதை குறித்து ஆராய வேண்டும்"**

***"15. இந்த ஒப்பந்தத்திலும் HDL ன் கணைக்காய்வாளர்கள் ஹோட்டலின் முகாமையாளர்கள் மற்றும் ஹில்டன் சர்வதேச நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட ஒப்பந்தம் 1 அடிப்படையிலும் இந்த நோக்கத்திற்கு தேவையான நிதிக்கூற்று மற்றும் இலாப ஈட்டுகையின் எதிர்வுகூறலை தயாரிக்கவேண்டும்"***

*அப்போதைய ஐ.தே.க.பாராளுமன்ற உறுப்பினரான ராஜித சேனாரத்ன அவர்கள், இலங்கை பாராளுமன்றில் நீதியமைச்சர் G.L அவர்கள் பிழையான கருத்துக்களை முன்வைத்துள்ளார் என்பதனை நீண்ட விவாதத்தின் பொது வெளிக் காட்டியிருந்தமையையும் இந்த புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த நீண்ட கேள்விகளுக்கு G.L பீரிஸ் அவர்கள் பதில் அளிக்க தவறியமையானது அவர் வேண்டுமென்றே தவறான கருத்துக்களை பாராளுமன்றிலும் வெளியிலும் தெரிவித்திருந்தார் என்பது புலப்படுகின்றது.*

*பா. உ .ராஜித சேனாரத்ன அவர்களின் உரையின் பகுதிகள்*

*அந்த நேரத்தில் உங்களுடைய ஒரு பிரதியமைச்சர் உங்களைக்குறித்து கூறிய விடயமாகும். அன்று பேராசிரியர்.G.L. பீரிஸ் உள்ளடங்கலான பாதுகாப்பு நாணயமாற்று ஆணைக்குழுவை கௌரவ லக்ஷ்மன் கிரியெல்ல அவர்கள் கடுமையாக சாடியிருந்தார். இந்த நபர்கள் மோசடியை குறித்து பாராமுகமாயிருந்தார்கள் என்று லக்ஷ்மன் கிரியெல்ல அவர்கள் கூறியிருந்தார்கள். இன்று பேராசிரியர் G.L. பீரிஸை குறித்து கௌரவ லக்ஷ்மன் கிரியெல்ல என்னத்தை கூறுவார்?*

*மேற்குறித்த பின்னணியிலே அன்றைய சட்டமா அதிபரான திலக் மாரப்பன அவர்கள் 1993ம் ஆண்டில் அவராலே தயாரிக்கப்பட்ட ஹில்டன் தீர்வு ஒப்பந்தத்தில் மிகச் சரியாக ஒரு பதத்தை உள்ளடக்கியிருந்தார்.அதிலே அவர் திரு.அமரசேகர அவர்களினால்ஹில்டன் விடயம் தொடர்பில் பல்வேறு முறைப்பாட்டுகள் செய்யப்பட்டிருந்த போதும் பாதுகாப்பு நாணயமாற்று ஆணைக்குழுவானது அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்காமல் தம் கடைமையை செய்ய*

*தவறியமையால் அதன் உறுப்பினர்கள் மீது அரசாங்கம் மிகச் சரியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என தெரிவித்திருந்தார் . இதே உள்ளடக்கமானது 1995 ஜூனில் சொலிசிட்டர் நாயகத்தினால் அனுமதியளிக்கப்பட்டு இந்த அரசாங்கம் நடைமுறைப்படுத்திய ஹில்டன் தீர்வு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.*

*அது அப்போதைய சட்டமா அதிபரினாலும் தற்போதைய சொலிசிட்டர் நாயகத்தினாலும் அங்கீகரிக்கப்பட்டுமிருந்தது.*

*எனவே இந்த அரசாங்கமானது பாதுகாப்பு மற்றும் நாணயமாற்று ஆணைக்குழுவின் ஏனைய அங்கத்தவர்களோடு பேராசிரியர்.G.L. பீரிஸிற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குமான ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டிருந்தது. இது முன்னாள் சட்டமா அதிபர் மற்றும் தற்போதைய சொலிசிட்டர் நாயகம் என்போரின் கருத்துக்கமைவாகவும் அவர்கள் சரியாக கொடுத்த அனுமதிக்கமைவாகவும் இருந்தது. இதை கௌரவ கிரியெல்ல அவர்கள் மறுக்க முடியுமா?*

*இதை அறிந்து கொண்டதும் பேராசிரியர் GL பீரிஸ் என்ன செய்தார், கோபத்திலும் பைத்தியக்கார விதத்திலும் செயற்பட்டு பிழையான தகவல்களை பாராளுமன்றில் கூறி அதன் அங்கத்தவர்களை தவறாக வழிநடத்தினார்,ஹில்டன் ஹோட்டல் தீர்வு ஒப்பந்தத்தின் தெரிவு செய்யப்பட்ட ஒரு பகுதியை மாத்திரம் வாசித்து முற்றிலும் பிழையான ஒரு படத்தை சித்தரித்தார். முழு ஆவணமும் அவர் முன் இருந்த போதும் அவர் வேண்டுமென்றே ஏனைய பந்திகளை வாசிக்கவில்லை.*

*XXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXX*

*தனது பழைய நடைமுறைகளையும் காரியங்களையும் வெளியே திரு . நிஹால் ஸ்ரீ அமரசேகர அவர்கள் கொண்டுவந்து விடுவார்கள் என்ற பயத்திலும் தனக்கு இவரால் ஆபத்து இருப்பதையும் கண்டு அவரை பழிதீர்க்கும் நோக்கில் இவர் இவ்வாறு செயற்பட்டார். பேராசிரியர் GL பீரிஸ் அவர்கள் இன்று தான் விமர்சிக்கும் அதே கட்டமைப்பிலே பங்குதாரராக இருந்ததுமல்லாமல் வேண்டுமென்றே முழு ஆவணமும் தன் முன் இருக்கையிலே பிழையான தரவுகளை கொடுத்தது பாராளுமன்றை தவறாக வழிநடத்தினார்.*

*இந்த சபையை பிழையாக வழிநடத்தினதுமன்றி, பேராசிரியர் GL பீரிஸ் அவர்கள் ஹில்டன் ஹோட்டல் தீர்வு உடன்படிக்கையினால் பாதிக்கப்பட்ட நபர்களுள் தானும் ஒருவர் என்பதையும் வெளிக்கொணரவில்லை. பாராளுமன்றில் அறிக்கையை சமர்ப்பிக்கும் முன்பு இது தொடர்பில் அவருக்கு இருந்த முரண்பாட்டினை கூறியிருக்க வேண்டும்.*

மேற்குறிப்பிட்ட பின்னணியில், நூலாசிரியரின் வழக்கறிகர்களால் 27.03.1997அன்று நீதியமைச்சருக்கு எழுதிய கடிதத்திற்கு அவரால் பதிலளிக்க முடியவில்லை. இதனடிப்படையில் நூலாசிரியர் தன்னை இழிவுபடுத்தினார் என்ற அடிப்படையிலும் மற்றும் HDL இற்கு பங்கம் விளைவிக்கும்படியாக நடந்து கொண்டார் என்றவகையிலும் நீதியமைச்சர் G.L . பீரிஸிற்கு எதிராக இரண்டு வழக்குகளை தாக்கல் செய்தார்.

அதிர்ச்சியூட்டும் இன்னொமொரு விடயம் என்னவெனில், தனது நிர்வாகத்தின் கீழிருந்த இந்த வழக்கை விசாரிக்கும் கொழும்பு மாவட்ட மேலதிக நீதவான் ஒருவருக்கு நீதியமைச்சர் G.L. பீரிஸ் அவர்கள் கதைத்து நூலாசிரியரின் இந்த மனுவை தள்ளுபடி செய்யும்படி கேட்டுள்ளார். இதனை அறிந்துகொண்ட நூலாசிரியர் உடனடியாக செயற்பட்டு வழக்கினை வேறொரு நீதிபதி விசாரிக்கும்படியாக மேற்கொண்ட நடவடிக்கையானது நீதியமைச்சர் G.L . பீரிஸ் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு தடையாக இருந்தது.

நிதியமைச்சரும் பிரதி நிதியமைச்சருமான G.L பீரிஸ் அவர்களினால் இந்த குறுக்கு கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாதுபோனதுமல்லாமல், சிவில் நடவடிக்கை அங்கம் 102(1) இன் அடிப்படியில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் கோரப்பட்ட நிதியமைச்சு / திறைசேரி போன்றவர்களிடம் இருந்த இந்த ஆதாரங்களை கொழும்பு மாவட்ட நீதிமன்றிக்கு சமர்ப்பிக்கவும் இல்லை.

இதன் பிரகாரம் இந்த வழக்கின்பிரதிவாதியான நீதியமைச்சரான G.L. பீரிஸ் இருந்தபோதும் அவரது நிர்வாகத்தின் கீழ் இருந்த பயமற்ற தைரியமான கொழும்பு மாவட்ட நீதிபதி சரத் அம்பேபிட்டிய அவர்கள் இந்த வழக்கில் நீதியமைச்சரின் பதில்களை மறுத்து இவ்வழக்கின் இடைக்கால தீர்ப்பை நூலாசிரியரான மனுதாரருக்கு வழங்கினார்.

இந்த தீர்ப்பினால் குழப்பமடைந்த நீதியமைச்சர் G.L. பீரிஸ் இந்த தீர்ப்பிற்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கொன்றை தாக்கல் செய்தார், ஆனால் மேன்முறையீட்டு நீதிமன்றில் நூலாசிரியரின் வழக்கறிகர்கள் இரு சாராரும் பங்குகொள்ளும் நீதியான விசாரணை வேண்டும் என

*கேட்டுக்கொண்டதற்கிணங்க வழக்கினை மீண்டும் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் விசாரிக்க முடிவானது.*

*முரண்பாடான விதத்தில் நூலாசிரியரான மனுதாரரின் சார்பில் உச்ச நீதிமன்றில் பா.உ.K. N. சோக்சிக்கெதிராக எழுத்து மூல அறிக்கை சமர்ப்பித்திருந்த ஜனாதிபதி சட்டத்தரணி H L டீ சில்வா அவர்கள் இந்த வழக்கில் K N சொக்சிக்கு ஆதரவாக செயற்பட்ட G.L .பீரிஸிற்கு ஆதரவாக மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆஜரானார். இவை கொழும்பு ஹில்டன் ஹோட்டல் கட்டுமானம் இலங்கை அரசிற்கு எதிரான மோசடி பாகம் 02, வெளிப்படுத்தப்பட்ட குற்றம் ஆனால் மூடி மறைக்கப்பட்டது, போன்ற நூல்களிலும் மற்றும் பதில்கள் கிடைக்காத H.L. டீ சில்வாவிற்கு நூலாசிரிய மனுதாரரின் சட்டத்தரணி எழுதிய கடிதங்களிலும் காட்டப்பட்டுள்ளது.*

*இதனை தொடர்ந்து இந்த குறுக்கு விசாரணை வழக்கும் ஆவணங்களை கண்டுபிடிக்கும் வழக்கும் உச்ச நீதிமன்றுக்கு கொண்டு செல்லப்பட்டதுடன், தீர்வு திட்டம் அமுலாக்கப்பட்டதுடன் நூலாசிரியர் இந்த வழக்குகளை முன்னெடுக்கவில்லை.*

*இந்த வழக்குகள் உச்ச நீதிமன்றுக்கு செல்லும் முன்னர் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் மேலதிக நீதவான் திலக் தப்ரேவ் அவர்கள் நடத்திய விசாரணைகளில் நீதியமைச்சர் G.L. பீரிஸின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா ஆஜராகியிருந்த வேலை பின்வரும் பந்திகள் புத்தகத்திலிருந்து எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.*

> ***"மிக முக்கியமாக அதேவேளை 3 நாட்களுக்கு முன்னர் 22 ஆகஸ்ட் 2000 அன்று கொழும்பு மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 19849/MR என்ற வழக்கு எண்ணை கொண்ட எனது வழக்கில் ஒரேயொரு பிரதிவாதியாக இருந்த முன்னாள் நீதியமைச்சரும் பிரதி நிதியமைச்சரும் தற்போதைய வெளிவிவகார அமைச்சருமான G.L . பீரிஸிசை 1வது பிரதிவாதியாக குறிப்பிட்டு அவருக்கு கேள்வி கேட்பதை அனுமதிக்கும் வகையில் முறையற்ற தீர்ப்பொன்றை மாவட்ட மேலதிக நீதிபதி திலக் தப்ரேவ் வழங்கியிருந்தார். (பாகம் 8ஐ பார்க்கவும்)"***
>
> ***" அதனை தொடர்ந்து அதிர்ச்சியூட்டும் வகையில், டிசம்பர் 2 1996 அன்று சிங்கள பத்திரிகையான தினமின பத்திரிகையில் வெளியான செய்தி தொடர்பிலான மேலதிக நீதவான் திலக் தப்ரேவ் அவர்களின் தனிப்பட்ட நட்டஈட்டு வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டீ சில்வா நீதவானுக்கான ஆஜராகியிருந்த போது இலங்கை பத்திரிக்கை கூட்டுத்தாபனமானது ரூபா 10மில்லியனை நீதவானுக்கு செலுத்தவேண்டும் என கொடுக்கப்பட்ட தீர்ப்பை 25 மார்ச் 2001 அன்று வெளியான சண்டே லீடர் பத்திரிகையில் வாசித்தறிந்தேன்"***
>
> ***"இதனை தொடர்ந்து ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டதன் பிரகாரம் உயர் நீதிமன்ற நீதிபதி திலக் தப்ரேவ் நீதிசேவையிலிருந்து விலகும்படியான நிலைக்கு தள்ளப்பட்டார்."***

*நீதியமைச்சர் G.L. பீரிஸிக்கு செய்ததைப் போலவே, நூலாசிரியரின் வழக்கறிஞர் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கும் 8.4.1997ல் நூலாசிரியருக்கு எதிராக பொய்யான கருத்துக்களை தெரிவித்தார் என்ற வகையில் கடிதம் ஒன்றை அனுப்பினார். அவரும் நீதியமைச்சர் G.L. பீரிஸைப் போலவே பதிலளிக்காமையானது உண்மையான தகவல்களை உறுதிப்படுத்தியது.*

*மேற்குறித்த பின்னணியில், இலங்கை அரசாங்கமானது ஒப்புக்கொண்ட தீர்வு ஒப்பந்தத்தை அமுலாக்குவதில் தாமதம் காட்டியமையானது, ஜப்பானிய அரசானது தனது அதிருப்தியை வெளிக்காட்டும் நிலைக்கு வந்தது. இதனை தொடர்ந்து ஜப்பானிய அரசானது, 1996ம் ஆண்டு நவம்பர் நடைபெற்ற உதவி வழங்கும் குழு கூட்டத்தில் இலங்கைக்கு கொடுக்கப்படவிருக்கும் 245மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியானது தீர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வருமளவும் கொடுக்கப்படாது எனவும் நடைமுறைப்படுத்தப்படாத பட்சத்தில் பொருத்தனை செய்யப்பட்ட நிதியுதவி வழங்கப்படமாட்டாது எனவும் அழுத்தங்களை பிரயோகித்தது.*

*இந்த பின்னணியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இடையீட்டாலும் அவர் வருந்தி கேட்டத்திற்கிணங்கவும் நூலாசிரியரான மனுதாரரின் அனுமதியோடு அப்போதைய திறைசேரி செயலாளர்*

B C பெரேரா மற்றும் அன்றைய சட்டமா அதிபரான சரத் N சில்வா ஆகியோரால் 1996ம் ஆண்டு அக்டோபர் மாதம் தீர்வு உடன்படிக்கையில் "முன் விதிமுறைகள்" என்ற பதத்திற்கு பதிலாக "பின்னான விதிமுறைகள்" என்ற மாற்றம் செய்யப்பட்டு அதனை இலங்கை அரசு முற்றாக ஏற்றுக்கொண்டதன் அடிப்படியில் உள்ளீடுகள் செய்யப்பட்டன. ஆதாரம் : உள்ளீடுகளின் பகுதிகள்.

> "மேற்குறிப்பிட்ட தீர்வு உடன்படிக்கை தொடர்பில் காணப்பட்ட தாமதத்தினை குறித்து அரசாங்கமானது கரிசனை கொண்டுள்ள அதேவேளை, ஜப்பான் இலங்கை உறவுகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாதவகையில் இதனை முன்னெடுத்து செல்ல அரசானது விரும்புகிறது"

> "இலங்கை அரசானது இந்த அடிப்படையில் திரு அமரசேகர அவர்களது அனுமதியோடும் கருத்துக்களோடும் 1ம் 2ம் தீர்வு உடன்படிக்கையையும் 3ம் 4ம் உடன்படிக்கைகளிலே இங்கே குறிப்பிட்ட பகுதிகளை மாத்திரமும் நடைமுறைப்படுத்த இணக்கம் தெரிவிக்கிறது. குறித்த தரப்புகளாலும் இடையிலும் 3ம் 4ம் தீர்வு உடன்படிக்கைகளிலே உள்ள சரத்துக்கள் தொடர்பில் பொருத்தமான சட்டங்களின் கீழ் இலனாகி அரசானது தேவையான நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என புரிந்துணர்வு இருந்தது."

*அதற்கமைய குறித்த உள்ளீடானது இலங்கை அரசின் சார்பில் திறைசேரி செயலாளரினாலும் நூலாசிரியரான மனுதாரரினாலும் மிட்சுய் மற்றும் டைசுய் கூட்டுத்தாபனங்களாலும் கைச்சாத்திடப்பட்டன. இலங்கை அரசின் வற்புறுத்தல் மற்றும் தொடர்ச்சியான இரங்களின் நிமித்தம் குறித்த இரண்டு வழக்குகள் இரண்டிலும் நூலாசிரியரான மனுதாரர் முடிவிற்கு கொண்டுவந்து இலங்கை அரசின் வற்புறுத்தலின் பேரில் நவம்பர் 1996இற்கு முன்னர் விலக்கிக்கொண்டார் .*

*மேற்குறித்த இந்த முயற்சிகளில் அப்போதைய பிரதி திறைசேரி செயலாளர் P B ஜயசுந்தர நூலாசிரியரான மனுதாரரோடு இந்த வழக்குகளை வாபஸ் பெறுமாறு நேரடியான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதோடு, 25.10.1996 அன்று HDL இயக்குனர் சபையின் கூட்டத்திற்கு தலைமை தாங்கி நடாத்தினார் அக்கூட்ட அறிக்கையின் ஒரு பகுதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.*

> *"தலைவர் PB ஜயசுந்தர அவர்கள் இந்த கூட்டமானது இலங்கை ஜப்பான் உறவுகள் தொடர்பிலான தேசிய முக்கியத்துவம் மிக்க ஒன்று எனவும் இக்கூட்டத்தை அரசாங்கத்தின் வேண்டுகோளின்பேரில் தான் நடாத்துவதாகவும் அனைத்து இயக்குனர்களையும் கொடுக்கப்பட்டுள்ள நோக்கங்களின் பிரகாரம் நடந்துகொள்ளவேண்டும் எனவும் அழைப்பு விடுத்தார். இதனை அனைவரும் ஏற்றுக்கொண்டனர்."*

*இதன் பிறகு, நூலாசிரியர் தனது வழக்குகளை வாபஸ் வாங்கிக்கொண்டதன் அடிப்படியில், ஏலவே மனுதாரரான நூலாசிரியரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட இடைக்கால தடையுத்தரவின் நிமித்தம் சேர்ந்திருந்த அமெரிக்க டொலர் 30 மில்லியனில் 29 மில்லியனை ஜப்பானிய அரசாங்கத்தின் ஏற்ப நவம்பர் 1996ல் நடைபெறவிருந்த உதவி வழங்கும் குழு கூட்டத்திற்கு முன்னர் ஹில்டன் ஹோட்டலின் உரிமை நிறுவனமான HDL மிட்சுய் மற்றும் டைசுய் கூட்டுதாபனங்களுக்கு செலுத்தியது.*

*மேலதிகமாக, மீளட்டவணைப்படுத்தப்பட்ட 16 வருடங்களில் குறைக்கப்பட்ட வருட வட்டி வீதமான 5.25% செலுத்தப்படவேண்டிய மிகுதி கடன் தொகை தொடர்பில் இலங்கை அரசல்லாது HDL நிறுவனமானது 16 திகதியிடப்பட்ட பொருத்தனைகளை மிட்சுய் மற்றும் டைசுய் கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கியது.*

*தொடர்ந்து மேன்முறையீட்டு நீதிமன்றின் நீதிபதி C.V . விக்னேஸ்வரனின் கேள்விக்குரிய தீர்ப்பினால் தீர்ப்பு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த HDL ன் நிதி மீள்கட்டமைப்பானது கட்டுப்படுத்தப்பட்டதுடன், புதுமையான முறையில் HDL இனை முறிவுற்ற நிலைக்கு தள்ளிய அதே தீர்வு ஒப்பந்தத்தின் அடிப்படியில் ஜப்பானிய கம்பெனிகளுக்கு கொடுப்பனவுகளையும் செய்ய வைத்தது.*

*நீதியரசர் C.V. விக்னேஸ்வரனின் தீர்ப்பு எனும் புத்தகத்தின் பகுதிகள்*

> *உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட 33&34/1992 ஆகிய வழக்குகளில் மோசடி இடம்பெற்றதை உச்ச நீதிமன்றம் உறுதி செய்திருந்தபோதும் உத்தரவாதியான இலங்கை அரசின்மீதும் HDL ன் மீதும் இடம்பெற்ற மோசடிக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் பாராமுகம் காட்டியது.*

> *முரண்பாடான மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பினால் தீர்வு உடன்படிக்கையின் மொத்த கட்டுப்பாடுகளும் கட்டுப்படுத்தப்பட்ட நிலையில், குறைக்கப்பட்ட கொடுப்பனவு பணத்தை (உடன்படிக்கையில் குறிக்கப்பட்டிருந்த மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட மிகுதி கடனில்) மிட்சுய் மற்றும் டைசுய் கம்பெனிகளுக்கு செலுத்துமாறு பின்வரும் குறிப்புகள் இடப்பட்டன.*

> *"ஜனாதிபதி சட்டத்தரணி சிவராசா அவர்கள் இந்த வழக்கு விசாரணைகளின் போது, தனது கட்சிக்காரரின் உரிமைகள் P6 P 12,P 13 ஆகிய சரத்துக்கள் என்பன பாதுகாக்கப்படும் பட்சத்தில் ஜப்பானியர்கள் அவர்களுக்கு சேர வேண்டிய பணத்தை பெறுவதில் தனக்கு ஆட்சேபனை இல்லை என நீதிமன்றில் தெரிவித்தார்."*

*மேற்குறித்த விடயமானது கோர்னெல் & கோ விற்காக ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணியான சிவராசா எந்த அடிப்படையில் மிட்சுய் மற்றும் ரைஸுய் கம்பெனிகளுக்கு கொடுப்பனவை செய்யும்படி வேண்டினார் என்னும் சந்தேகமான ஒரு கேள்வியை எழுப்புவதுடன் அதனை மேன்முறையீட்டு நீதிபதி C.V . விக்னேஸ்வரன் தீர்வு உடன்படிக்கையை முற்றாக கவனத்தில் எடுக்காது உடனடியாக அந்த கருத்துக்கு எவ்வாறு இயங்கினார் இந்த தீர்வு உடன்படிக்கையானது ஒன்றோடொன்று தனாகியதும் கூட்டாக செய்யப்பட்ட ஒரு உடன்படிக்கையும் ஆக இருப்பதையும் விளங்கவில்லையா? என்ற கேள்வியையும் எழுப்புகின்றது.*

*மிட்சுய் மற்றும் டைசுய் நிறுவனங்களுக்கு கொடுப்பனவு செய்வதில் எந்தவொரு உடன்படிக்கையும் இருக்கவில்லை தனியே தன்னிச்சையான ஒருதலைபட்சமான கேள்விக்குரிய மேன்முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்பை ஆக்குவதோடு, மேன்முறையீட்டு நீதிபதியான CV விக்னேஸ்வரனும் கோர்னெல் &கோவின் சட்டத்தரணி சிவராசாவும் இதற்கான பொறுப்பாளிகளாக இருப்பதுடன், நான் தொடர்ச்சியாக எதிர்த்து வந்த இந்த கருமங்களில் இந்த தீர்ப்பினால் வந்த நேரடி விளைவான HDL ன் வீழ்ச்சிக்கும் பொறுப்புக்கூற வேண்டும்.*

*இந்த விசாரமான தீர்ப்பானது, HDL மற்றும் நூலாசிரியரினால் தீர்வு உடன்படிக்கையை HDL ன் நிதி மீள்கட்டமைப்பு மற்றும் இலாபத்தையும் கடன் மீள் செலுத்தும் திராணியையும் உறுதி செய்தல் உள்ளடங்கலான அதன் முழு வடிவில் அமுலுக்கு கொண்டு வராமல் எந்தவொரு கொடுப்பனவுகளையும் செய்யப்படக் கூடாது என முன் வைக்கப்பட்டிருந்த அனைத்து ஆவணங்கள் எதிர்ப்பு அறிக்கைகள் சேர்க்கப்பட்ட தொகுப்புக்கள் என்பவற்றை கருத்திற் கொள்ளாது கொடுக்கப்பட்ட ஒன்றாகும் .*

*மேன்முறையீட்டு தீர்ப்பில் மேற்குறிப்பிட்ட முழுமையான ஆவணங்கள் தொடர்பில் எந்தவொரு மேற்கோள்களும் காட்டப்படவில்லை என்பதோடு, குறித்த விடயம் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் தடையுத்தரவையோ இடைக்கால உத்தரவையோ வழங்குவது தொடர்பில் எக்கரிசனையும் கொள்ளவில்லை.*

*XXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXXX*

*குற்றப்புலனாய்வு பிரிவு மற்றும் சொலிசிட்டர் நாயகம் ஜனந்திப்பதை சட்டத் தரணி டக்லஸ் பிரேமரத்ன ஆகியோரின் ஒத்துழைப்போடு விசேட ஜனாதிபதி ஆணைக்குழு நடாத்திய முதற்கட்ட விசாரணைகளின்போது நான்கு பேருக்கு மோசடி இடம்பெற்றது என்ற அடிப்படையில் அறிவித்தல் விடுத்திருந்தது (கொழும்பு ஹில்டன் ஹோட்டல் கட்டுமானம் முறையற்ற முறையில் "மறைக்கப்பட்ட இலங்கை அரசின் மீதான மோசடி பகுதி II ) இந்த அறிவித்தல்களும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணக் கோவைக்குள் அடங்கும்.*

*C.V. விக்னேஸ்வரனால் எழுதப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்பானது மீள் தாக்கல் செய்யப்பட்ட 721/98,728/98 மற்றும் 738/98 ஆகிய விண்ணப்பங்களுக்கு மாத்திரம் செவிகொடுத்து இடைக்கால தடையுத்தரவு அல்லது தடை செய்வதை சற்றேனும் கருத்திற்கொள்ளாது விண்ணப்பங்களுக்கு அனுமதிகோரிய தாக்கல்களை ஒருபோதும் எடுக்காது கொடுக்கப்பட்ட தீர்ப்பாகும். இது முழுமையாக C.V. விக்னேஸ்வரனுக்கு மறைமுகமான ஒரு நோக்கம் இருந்ததை வெளிக்காட்டியது. இதனைத்தொடர்ந்து இப்படியான ஒரு முரண்பாடு இருந்ததை ஏற்று உச்ச நீதிமன்றமானது விண்ணப்பத்தை பரிசீலிக்க அனுமதியளித்தது.*

*இந்த குளறுபடிகள் பின்னணியில் நூலாசிரியர் HDL ன் இயக்குனர் என்ற வகையில் 2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பெனிகள் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருந்த அனுமதியின் பேரில் HDL லை கலைப்பதற்கான ஒரு மனுவை தாக்கல் செய்தார். இது தொடர்பில் அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவிற்கு நூலாசிரியர் அறிவித்திருந்தபோதும் 2007 ம் ஆண்டின் 7ம் இழக்க தமனிகள் சட்டத்திற்கு முரணானவகையில் செயற்பட்டு அன்றைய திறைசேரி செயலாளர் P.B. ஜயசுந்தர குறித்த மனுவிற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றில் ஆட்சேபனைதெரிவித்தார்.*

*எவ்வாறெனினும் இதற்குப்பிறகு இப்படியான நீதி அதிகாரங்கள் பாவனையில் இருக்கையில், இலங்கை அரசும் உச்ச நீதிமன்றமும் இலங்கை அரசியல் யாப்பிற்கு விரோதமாக செயற்பட்டு சொத்து பகரிப்பு சட்டமூலத்தை இலங்கை பாராளுமன்றில் நவம்பர் 2011 ல் அவசரமாக நிறைவேற்றி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இலங்கை பாராளுமன்றில் நிதியமைச்சர் என்ற வகையில் HDL ஆனது திறைசேரிக்கு 12,098.6மில்லியன் ரூபா செலுத்தவேண்டும் என்பதை காரணங்காட்டி, உண்மையில் இதில் 8,148.7மில்லியன் ரூபாய் ஒன்று சேர்க்கப்பட்ட வட்டியாகவும், மூலதனம் 3,949.9 மில்லியனாகவும் காணப்பட்டது, HDL ன் அனைத்து பங்குகளையும் திறைசேரி செயலாளருக்கு மாற்றும்படி செய்தார்.*

*கொழும்பு ஹில்டன் ஹோட்டல் கட்டுமான திட்டமானது 1983ம் ஆண்டு இடம்பெற்ற மிக மோசமான இனக்கலவரத்தை தொடர்ந்து சர்வதேச ரீதியில் பாதிக்கப்பட்டு மதிப்பிழந்திருந்த இலங்கையின் பெயரை மீள கட்டியெழுப்பி இலங்கை சர்வதேச ரீதியில் நிமிர்ந்து நிற்பதற்கு இலங்கை அரசின் உறுதுணையோடும்*

ஆசிர்வாதத்தோடும் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், ஹில்டன் ஹோட்டல் கட்டுமானத்தின் செயலாக்கத்திலே கூட்டான மோசடி இடம்பெற்றததும் அதனை பல்வேறு சவால்களுக்கு மத்தியில் நூலாசிரியர் எதிர்கொண்டபோதும் ஆனால் ஜப்பானிய அரசின் அழுத்தங்கள் காரணமாகவும் இலங்கை அரசின் வற்புறுத்தலின் பேரிலும் நூலாசிரியர் வழக்குகளை முடிவிற்கு கொண்டுவரும் வகையில் வாபஸ் பெற்றமையானது இப்புத்தகத்தில் விபரிக்கப்பட்டுள்ளது.

நூலாசிரியர் தனது கொள்கைகள் மற்றும் நற்பேற்றின் அடிப்படையில் அரச நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் உள்ள உயர்ந்த பதவிகள் வகிப்பவர்களால் செய்யப்படும் மோசடிகளுக்கு எதிராக தனது உயிரை பணயம் வைத்து போராடியதன் விளைவாக பல்வேறு தேவையற்ற அழுத்தங்களுக்கு முகங்கொடுத்தது பல சவால்களையும் கடந்துள்ளார். ஆதாரம்: நிதியமைச்சின் ஒரு சில கூட்ட அறிக்கைகள்.

தங்களது கூட்ட அறிக்கை (60) இலிருந்து பின்வரும் அவதானிப்புக்களை செய்ய விரும்புகிறேன்.

அண்மித்த மாவட்ட நீதிமன்றின் தீர்ப்பிற்கமைய திரு.நிஹால் ஸ்ரீ அமரசேகராவின் வழக்கறிஞர்கள் ஜப்பானின் எக்சிம் வங்கி உள்ளிட்ட நிதி நிறுவனங்களுக்கு மோசடி இடம்பெற்றுள்ள காரணத்தால் இலங்கை அரசு வழங்கிய உத்தரவாதம் செல்லுபடியாகாது என்பதனை அறிவிக்குமாறு சட்டமா அதிபரை கேட்டுள்ளார்கள்.

திரு. நிஹால் ஸ்ரீ அமரசேகரவின் வழக்கறிஞர்கள் சட்டமா அதிபருக்கு அவரின்பொறுப்புக்களையும் வேலையையும் குறித்து ஞாபகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்பதால் இந்த கோரிக்கையானது எவ்வித பலத்தையும் கொண்டிருக்கவில்லை. அரசாங்கம் வழங்கிய உத்தரவாத ஆவணத்தில் மோசடி இடம்பெற்றமையானது நிரூபிக்கப்படும்பட்சத்தில் குறித்த உத்தரவாதமானது செல்லுபடியற்றதாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே எவரும் எச்சாரருக்கும் இதைக் குறித்து ஞாபகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

இது குறித்து நான் ஷிப்லி அசீஸுடன் பேசியபோது அவர் தாங்கள் இது தொடர்பில் எடுக்கக்கூடிய எந்தவொரு நடவடிக்கையும் இல்லை என்பதால் இக்கடிதத்தை கணக்கில் எடுக்கவில்லை என கூறினார்.

திரு. அமரசேகரவினால் அனுப்பப்பட்ட கடிதத்தை பார்க்கின்றபோது நீதிமன்ற தீர்ப்பை குறித்தது அவர் தேவைக்கும் அதிகமாக நடந்துகொள்கிறர் என்பது புலப்படுகிறது. நவம்பர் 8 1991ம் ஆண்டு அனுப்பிய கடிதத்தில் வர குறிப்பிடுகிறார், மாவட்ட நீதிபதி பக்கம் (1) மற்றும் 2ல் உள்ள (1) பகுதியை அவதானத்திற்கு எடுத்துள்ளார் என்று, உண்மை இவை தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அந்த தீர்ப்பில் திரு. அமரசேகர அவர்கள் கூறிய குற்றச்சாட்டுக்களை மீள கூறியுள்ளாரே தவிர தானாக எந்தவொரு முடிவுக்கும் மாவட்ட நீதிபதி வரவில்லை. நீதிபதி அவர்கள் மனுதாரரின் சமர்ப்பங்களுக்கு அமைய ஜப்பானிய கம்பெனிகளுக்கு கொடுப்பனவை செலுத்தினால் நாட்டிற்கு நஷ்டம் ஏற்படுமா என்பதை அவதானித்த போது இடைக்கால தடையுத்தரவு நீக்கப்படாது என மட்டுமே தெரிவித்தார். மேலும் இறுதி தீர்மானமானது பிரதிவாதிகளுக்கு சார்பாக அமையும் பட்சத்தில் அவர்களுக்கு போதிய அளவில் நஷ்ட ஈடு கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் அவதானத்திற்கு கொண்டுவந்தார்.

கொடுப்பனவுகள் செய்யப்படக்கூடாது என்ற மாவட்ட நீதிமன்றின் தீர்ப்பிற்கெதிராக இந்த ஜப்பானியர்கள் முறையீடு செய்கிறார்கள்.

கட்டுமானத்தின் ஒரு பகுதி மாத்திரமே முரண்பாட்டில் உள்ளபடியினால் எந்தவொரு கொடுப்பனவும் செய்யக்கூடாது என்ற மாவட்ட நீதிபதியின் தீர்ப்பானது நியாயமற்றதாகவே காணப்படுகின்றது. திரு.அஸீஸ் அவர்களும் ஜப்பானியர்களின் முறையீட்டிற்கு நாம் ஆதரவு அளிக்கவேண்டும் என்று எண்ணுகிறார்.இது குறித்தது அவர் ஆராய்ந்த பின்னர் நமக்கு தெரியப்படுத்துவார். அஸீஸ் ஆதரவு அழிப்பது முறையானது என கருதினால் நாம் மேன்முறையீட்டிற்கு ஆதரவு அளிக்க வேண்டும் என நான் கருதுகிறேன்.

மற்ற வகையில் அரசாங்கத்தின் நிலைமையை பலப்படுத்துவதற்கு ஜப்பானியர்களுக்கு உதவும் முகமாகவும் செய்யப்படக்கூடிய கருமமாக திருத்தப்பட்ட பங்கு பரிமாற்று ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதை துரிதப்படுத்த வேண்டும். இது குறித்த 13,14,15,16 வது கூட்ட அறிக்கை குறிப்புக்களை பார்க்கவும்.

PC.
20/11/91

ST

(1) I am informed that Mr. A is trying to get the Company de-listed from the Stock-Exchange. This has to be stopped.

(2) We may re-assure the Japanese that our guarantee of the loan will be honoured, in case of the rescheduling are being agreed to.

(3) Request A.G to take a fair view of the situation and support the Japanese firm to the extent possible, in their appeal to the Supreme Court. I think we should take a positive stand on this.

[illegible] 22/11

PS may settle [illegible] and map out our strategy. The NOA Director tell me that the building is in accordance with the Plans. The NOA had issued the certificate of conformity. The NOA can give evidence. This must be settled. [illegible] 22/11.

DEA

PS arrange a meeting as indicated by S/T above. [illegible]

[illegible] ✓

3/30 on 27th ✓